DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 745/2017**

Depositions of Witness for Prosecution Pw 36
Defence
Court

Name : திரு. தில்லை நாகராஜன்
Father's Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 11th day of August 2025.

**(A1 to A5 present. )**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருநெல்வேலி மாநகரம், திருநெல்வேலி நகர காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.08.2015 ம் தேதி நான் பாளையங்கோட்டை காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது, நிலைய குற்ற எண். 610/2015, சட்டப்பிரிவுகள் 302 இ.த.ச. சந்தேக மரணம் வழக்கினை சிறப்பு உதவி ஆய்வாளர்

திரு. தர்மலிங்கம் என்பவர் முதல் தகவல் அறிக்கையை பதிவுசெய்து வைத்ததை பெற்றுக்கொண்டு, அன்றைய தினம் 20.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சத்தியகனி, விஸ்வநாதன் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த **பார்வை மகசர் அ.சா.ஆ. 33** ஆகும். அந்த **மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 34** ஆகும். பின்பு சாட்சிகள் பரமேஸ்வரி, வேம்பன் ஆகியோரை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம்பதிவுசெய்தேன். கடந்த 13.08.2015 ம் தேதி 21.30 மணி முதல் 23.00 மணி வரை பஞ்சாயத்தார் முன்னிலையில் சாட்சிகள் லட்சுமி, தங்கம் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தில் கிடந்த சதையில்லா தலையும், எரிந்த நிலையில் காணப்பட்ட தாடையுடன் கூடிய மண்டையோட்டையும் பிரேத விசாரணை முடித்த பின்னர் பிரேத பரிசோதனைக்கு அனுப்பினேன். அந்த **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.35** ஆகும். பின்பு பிரேத விசாரணை முடித்து 23.15 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.ராமகிருஷ்ணன் என்பவர் மூலம் திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பிவைத்தேன். பின்பு சாட்சிகள் லட்சுமி, தங்கம், சத்தியக்கனி, விஸ்வநாதன், மாரியப்பன், முத்துச்சாமி, தலைமை காவலர் திரு. சங்கரபாண்டியன், தடய அறிவியல் உதவி இயக்குநர் திரு. டொனால்டு ரவீந்திரன் ஆகியோரை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவுசெய்தேன்.

கடந்த 16.08.2015 ம் தேதி சாட்சிகள் ராமகிருஷ்ணன், சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு. ஆறுமுகம், திரு. தர்மலிங்கம் ஆகியோரை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவுசெய்தேன். 27.08.2015 ம் தேதியில் பிரேத பரிசோதனையின் போது எடுக்கப்பட்ட மண்டையோட்டை தடய அறிவியல் ஆய்வகம் சென்னையில் ஒப்படைக்க சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. நூருல் ஹக் என்பவரை நியமித்து திருநெல்வேலி நடுவர் நீதிமன்றம் எண். 1க்கு வேண்டுகோள் விண்ணப்பம் தயார் செய்து அனுப்பிவைத்தேன். 22.09.2015 ம் தேதியில் பாளையங்கோட்டை காவல்நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. நூருல் ஹக் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். கடந்த 01.10.2015 ம் தேதி பாளையங்கோட்டை சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.சொர்ணம் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். 23.08.2015 ம் தேதி பிரேத பரிசோனையின் போது பிரேதத்தின் உடலிலிருந்து எடுக்கப்பட்ட உடல் உள்ளுறுப்புகளை தடய அறிவியல் ஆய்வகம், திருநெல்வேலிக்கு வேண்டுகோள் கடிதம் மூலம்

அனுப்பிவைக்கப்பட்டது. அந்த **வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ. 36** ஆகும். 16.11.2015 ம் தேதி இவ்வழக்கில் பிரேத பரிசோதனையில் கைப்பற்றப்பட்ட திசுக்களை ரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டதை நீதிமன்ற உத்தரவின் படி பெற்றுவர திரு. நூருல் ஹக் என்பவரை அலுவலாக அனுப்பி வைத்து, அந்த அறிக்கையை சென்னை தடய அறிவியல் ஆய்வகத்தில் பெற்று திருநெல்வேலி நடுவர் எண். 1 நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது. அந்த **தடய அறிவியல் அறிக்கை அ.சா.ஆ.37** ஆகும்.

14.11.2015 ம் தேதி திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவர் உதவி பேராசிரியர் திரு. செல்வமுருகன் என்பவரை விசாரணை செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவுசெய்தேன். 29.11.2015 ம் தேதி இந்த வழக்கு பாளையங்கோட்டை காவல் நிலையத்திலிருந்து திருநெல்வேலி அச்சன்புதூர் காவல்நிலையத்திற்கு எல்கை நிமித்தமாக மாறுதல் செய்யப்பட்டது.

கடந்த 15.08.2015 ம் தேதி குற்ற எண். 608/2015 சட்டப்பிரிவுகள் 302, 201 இ.த.ச வழக்கினை முந்தைய ஆய்வாளர் திரு. கிருஷ்ணன் என்பவரிடமிருந்து எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, முந்தைய ஆய்வாளரால் கைப்பற்றப்பட்ட தொடை எலும்பு மற்றும் வெட்டுப்பட்ட கழுத்து எலும்பு பகுதி, ரத்தம், எரிந்த உடல் எதனால் எரிக்கப்பட்டது என்பதற்காக தோலையும், திசுவையும் சேகரித்து வைத்ததையும் குற்ற எண். 610/2015 சட்டப்பிரிவுகள் 302, சந்தேக மரணம் வழக்கில் கைப்பற்றப்பட்ட மண்டை ஓடு, கழுத்து எலும்பு ஆகியவற்றையும் சேகரித்து ரசாயன பரிசோதனை செய்வதற்காகவும், மண்டை ஓட்டினை Super imposition செய்வதற்காகவும் தடய அறிவியல் ஆய்வகம், சென்னைக்கு 27.08.2015 ம் தேதி வேண்டுகோள் கடிதம் கொடுத்து குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண். 1 திருநெல்வேலி மூலம் அனுப்பி வைத்தேன். அந்த **வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.38** ஆகும். இந்த வழக்கும் எல்கை நிமித்தம் காரணமாக பாளையங்கோட்டை காவல் நிலையத்திலிருந்து திருநெல்வேலி அச்சன்புதூர் காவல்நிலையத்திற்கு மாறுதல் செய்யப்பட்டது.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

தலையில்லாத முண்டம் கிடந்த இடத்தை முதல் தகவல் அறிக்கையில் பார்த்து தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தை பார்வையிட சென்றபோது

புகார் கொடுத்த நபர் என்னுடன் வந்தாரா என்றால் வந்தார்கள். சம்பவ இடம் சென்றபோது, சிதைந்த தலையை பார்த்து அதன் பின்னர் சுற்றுப்புறங்களை பார்வையிட்டேன். நான் பார்த்தபோது, தலையில் கண்கள் இல்லாமல் எலும்புகள் சிதைக்கப்பட்டு எரிந்த நிலையில் அடையாளம் காண முடியாத நிலையில் இருந்தது. முகத்தில் உள்ள எலும்புகள் உடைக்கப்பட்டிருந்த காரணத்தினால் மோப்ப நாய் உதவியை நாடினேனா என்றால் ஆமாம். மோப்ப நாய் நிபுணர் கொடுத்த அறிக்கையை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. முகத்தில் உடைந்த எலும்பு துண்டுகளை மோப்ப நாய் கண்டறிந்து வரவில்லை என்றால் சரிதான். நான் மண்டையோடு மற்றும் பக்கத்திலிருந்து எடுக்கப்பட்ட பற்களையும் கொண்டு பிரேத விசாரணை நடத்தினேன். பிரேத விசாரணையின்போது உடன் இருந்த பஞ்சாயத்தார்கள் யாரும் அந்த பகுதியில் வசித்து வந்த நபர்கள் கிடையாது என்று சொன்னால் சரிதான். நான் பிரேத விசாரணை செய்த சமயத்தில் அச்சன்புதூர் காவல் ஆய்வாளரை தொடர்புகொண்டு பேசினேனா என்றால் பேசினேன்.

தடய அறிவியல் ஆய்வாளர் விஜயலட்சுமி என்பவரை நான் விசாரித்தேனா என்றால் அவரை நான் விசாரிக்கவில்லை. மணிமாறன் என்ற தடய அறிவியல் ஆய்வாளரை நான் விசாரித்தேனா என்றால் அவரை நான் விசாரிக்கவில்லை. 13.08.2015 அன்று உடலிலுள்ள திசுக்களையும், 14.08.2015 ம் தேதி தலையில் உள்ள திசுக்களையும் கைப்பற்றினேன் என்றால் சரிதான். ஆனால் 23.08.2015 ம் தேதிதான் மேற்படி திசுக்களை தடய அறிவியல் துறைக்கு அனுப்பினேன் என்றால் சரிதான். இடைப்பட்ட காலக்கட்டத்தில் மேற்படி திசுக்களை எங்கு வைத்து பாதுகாத்தேன் என்றால் திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வைத்து பாதுகாக்கப்பட்டது. மண்டையோடு தனியாகவும், கழுத்து எலும்பு, எலும்பை ஒட்டிய தசைகளை தனித்தனியாக கைப்பற்றினேன் என்றால் சரிதான். கழுத்திற்கு தனியாக, மண்டையோட்டிற்கு தனியாக பிரேத விசாரணை செய்தேனா என்றால் இல்லை. மண்டையோடு மற்றும் தாடை ஆகியவற்றை ஒன்றாக வைத்துதான் பிரேத விசாரணை செய்தேன். பிரேத விசாரணை செய்தபோது என்னுடன் எந்த மருத்துவரும் உடன் இருக்கவில்லை என்றால் சரிதான். நான் தலையையும், முண்டத்தையும் சேர்த்து வைத்து பிரேத விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான்.

டி.என்.ஏ பரிசோதனைக்கு எடுக்கப்பட்ட திசுக்கள் கழுத்துப்பகுதியிலிருந்து எடுக்கப்பட்டதா, மண்டையோட்டிலிருந்து எடுக்கப்பட்டதா என்றால் அது எனக்கு நியாபகமில்லை. நான் சொன்னதுபோல் சொன்ன நாள், சொன்னநேரத்தில் சிதைக்கப்பட்ட தலை கிடந்த இடத்தை பார்வையிட்டதாக சொல்வதும், பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்ததாக சொல்வதும், சாட்சிகளின் முன்னிலையில் சிதைக்கப்பட்ட தலை மற்றும் கழுத்துப்பகுதியை கைப்பற்றியதாக சொல்வதும் உண்மையல்ல என்றால் சரியல்ல. நான் கைப்பற்றியதாக சொல்லும் மண்டையோட்டிற்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் தொடர்பு கிடையாது என்றால் சரியல்ல. அந்த மண்டையோடு இந்த வழக்கில் இறந்துபோன நபரின் மண்டையோடு கிடையாது என்றால் சரியல்ல. எனது புலன் விசாரணையானது சட்டப்பிழையானது என்றும், ஏற்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை இல்லை**</u>

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi